இராணிப்பேட்டை மாவட்டம் காரைகூட்ரோடு ஏ.ஆர். காவல் வளாக மையத்தில்ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப் படவுள்ள விளையாட்டு வளாகத்தின் பணி முன்னேற்றம் குறித்து கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜே.யு.சந்திரகலா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் விநோத், நகர இளைஞர் அணி அமைப்பாளர் இசட்.ஏ.அஜ்மல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை – கோவை – கன்னியாகுமரி மாவட்டங்களில் விளையாட்டு விடுதி – சிறு விளையாட்டரங்கம்!

ரூ.10.89 கோடியில் விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்புப் பணிகள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஆக. 24-

சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதி, புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், புதிதாக கட்டப்பட உள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

சென்னை, கோயம்புத்தூர், கன்னியா குமரி ஆகிய மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதி, புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், புதிதாக கட்டப்பட உள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2025) அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ் நாட்டை உருவாக்கிடவும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல். உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், மாவட்ட விளையாட்டரங்கங்களில் சர்வதேச தரத்திலான விளையாட்டு வசதிகளை ஏற்படுத்துதல், முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் உள்ளிட்ட விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை புதிதாக உருவாக்குதல், சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளை தமிழ் நாட்டில் நடத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அதனடிப்படையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2025-2026 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத்தொடரில், சென்னை, கோபாலபுரத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி வளாகத்தில் புதிய விளையாட்டு விடுதி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர்கள் மாடம் புதுப்பிக்கப்படும் என்று அறிவித்தார்.

கோபாலபுரம் கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 மாணவர்கள் தங்கி குத்துச்சண்டை பயிற்சி பெறும் வகையில் புதிய விளையாட்டு விடுதி, உணவருந்தும் கூடம், சமையலறை, பயிற்சி மேற்கொள்ளும் பகுதி ஆகிய வசதிகளுடன் கட்டப்பட உள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர்கள் மாடம் 4.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து, புதுப்பிக்கப்பட உள்ளது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 200 மீ தடகள (மண்) பாதை, கையுந்துபந்து, கபாடி, கூடைப்பந்து, இறகுப்பந்து, கோ-கோ ஆடுகளங்கள், நீளம் தாண்டுதல் பகுதி ஆகிய விளையாட்டு வசதிகள் மற்றும் நுழைவு வாயில், நிர்வாக அலுவலக கட்டடம், கழிப்பறை வசதி ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் கட்டப்பட உள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் சென்னை கோபாலபுரத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமி வளாகத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள விளையாட்டு விடுதி, கோயம்புத்தூர் மாவட்டம் நேரு விளையாட்டு வளாகத்தில் 4.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா.எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (23.08.3025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி வந்த திருமதி வரலட்சுமி, பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததை முன்னிட்டு, அவரது குடும்பத்தினருக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ரூபாய் 10 இலட்சமும், தூய்மைப் பணியை மேற்கொள்ளும் உர்பேசர் சுமீத் நிறுவனத்தின் சார்பில் ரூபாய் 10 இலட்சமும் என மொத்தம் ரூபாய் 20 இலட்சம் நிவாரண உதவித்தொகைக்கான காசோலையினை அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார். அருகில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கம் திட்டத்தில்

பயன்பெற்ற கிராமப்புற மக்களின் எண்ணிக்கை என்ன?

ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. ஒன்றிய அரசுக்கு கேள்வி!

புதுடெல்லி, ஆக.24–

பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கம் திட்டத்தில் எவ்வளவு கிராமப்புற மக்கள் பயன்பெற்றுள்ளனர்? என்று கே.இ.பிரகாஷ் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பொத்தாம் பொதுவான பதிலை அளித்துள்ளது என்று கே.இ. பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:–

பிரதமர் வேலைவாய்ப்பு உருவாக்கம் திட்டமான PMEGP, கிராமப்புற மக்களுக்கு எவ்வாறு பயனளித்துள்ளது என்பதை அறிந்துகொள்ள, நாடாளுமன்றத்தில் ஒன்றிய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பினேன். ஆனால் அதற்கு ஒன்றிய அரசு அளித்த பதில்கள், வழக்கம் போல பொதுவான சில புள்ளிவிவரங்களையும், சில இணையதள முன்னெடுப்புகளையும் குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.

இது ஏமாற்றம் அளிப்பது என்பதோடு, இந்த அரசு கிராமப்புறங்களை தொடர்ந்து புறக்கணிப்பது ஏன் என்ற முக்கியக் கேள்வியையும் எழுப்புகிறது.

பொத்தாம் பொதுவான புள்ளி விவரம்!

PMEGP திட்டத்தின் பயனாளிகளில் 80% பேர் கிராமப்புறங்களில் உள்ளனர் என்ற தரவை மட்டும் அமைச்சர் பெருமையுடன் குறிப்பிட்டிருக்கிறார். இது உண்மையெனில் பாராட்டத்தக்கது. ஆனால், இந்த 80% என்பதை எதைக்கொண்டு அரசு கண்டறிந்தது, அவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள நிதி உதவி எவ்வளவு ஆகிய தகவல்கள் இல்லை. இது பொத்தாம்பொதுவான பொறுப்பற்ற பதில் என்பதில் சந்தேகமில்லை.

ஒன்றிய அரசு குறிப்பிடும் 80% கிராமப்புறப் பயனாளிகளில், சமூக ரீதியாகப் பின்தங்கிய (SC, ST, OBC), புவியியல் ரீதியாக ஒதுக்கப்பட்ட (வடகிழக்கு, மலைப் பகுதிகள்) மக்கள் எந்தளவு பயனடைந்துள்ளனர் என்பதற்கான தகவல்களும் இல்லை. ஒரு திட்டம் உண்மையாகவே அனைவரையும் உள்ளடக்கியதா (INCLUSIVE) என்பதை வெறும் ஒரு சதவீத எண்ணை மட்டும் கொண்டு எப்படி தீர்மானிப்பது? எனவே, இத்தகைய தரவுகள் இல்லாதது திட்டத்தின் சமமான வளர்ச்சி குறித்த பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது.

இந்திய மொழிகள் குறித்து வெற்றுப் பெருமை பேசினால் மட்டும் போதுமா?

PMEGP திட்ட விண்ணப்பங்களை 11 மொழிகளில் பெறத் தொடங்கியுள்ளதாக அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால், நமது அரசியலமைப்புச் சட்டம் 22 மொழிகளை அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாக அறிவித்துள்ளது. 2008ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு திட்டத்தில், கிட்டத்தட்ட 11 ஆண்டுகளாக ஆட்சி நடத்திய பிறகும், பாதி மொழிகளில் மட்டுமே விண்ணப்பிக்கும் வசதியை ஏற்படுத்தியிருப்பது, இந்திய மொழிகள் குறித்த ஒன்றிய அரசின் அக்கறையின்மையை மட்டுமே காட்டுகிறது.

பிணையம் இல்லாத கடன்; வங்கிகள் அதை நடைமுறைப் படுத்துகின்றனவா?

PMEGP ரூ.10 லட்சம் வரையிலான கடன்களுக்குப் பிணையம் கேட்க வேண்டாம் என வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்படுவதாகக் கூறியுள்ளார். இது ஒரு நல்ல அம்சம் தான். ஆனால், இந்த பரிந்துரை உண்மையில் எத்தனை தூரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது, வங்கிகள் அதை கடைபிடிக்கிறதா, எவ்வளவு மக்கள் பயனடைந்துள்ளனர் ஆகிய விவரங்கள் இல்லை. இது போன்ற வங்கிகள் சம்பந்தப்பட்ட சலுகைகள், தீவிரமான நடைமுறைப்படுத்தலும் கண்காணிப்பும் இல்லாமல் மக்களுக்கு பயனளிக்காது. ஆனால், ஒன்றிய அரசு இது குறித்து சரியான பதில்களை அளிக்கவில்லை.

புதுப்பிக்கப்படாத மாதிரி திட்ட அறிக்கைகள்! கிராமப்புற மக்களுக்கு இது எப்படி பயன்படும்?

PMEGP இணையதளத்தில் ஆயிரம் மாதிரி திட்ட அறிக்கைகள் (DPR) உள்ளதாக அமைச்சர் பதிலளித்துள்ளார். ஆனால், நான் ஆய்வு செய்ததில், பெரும்பாலான திட்ட அறிக்கைகள் இன்றைய சந்தை நிலைக்கு ஏற்ப புதுப்பிக்கப்படாமல், மிகவும் தரமற்ற நிலையில் உள்ளன. கிராமப்புறத்தைச் சேர்ந்த சிறு, குறு, நடுத்தர தொழில் முனைவோருக்கு வழிகாட்ட வேண்டிய இந்த திட்ட அறிக்கைகள் இப்படி இருப்பது, அவர்களுக்கு மேலும் சிக்கல்களையே உருவாக்கும். இதை ஒன்றிய அரசு உணர்ந்துள்ளதா என்பதே தெரியவில்லை.

புதிய போர்ட்டல் அறிமுகம்; ஆனால் செயல்பாட்டில் முன்னேற்றம் குறித்த தரவு இல்லை!

விண்ணப்பங்களை விரைவாக முடிக்க ஒரு புதிய போர்ட்டல் உருவாக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சொல்லியுள்ளார். ஆனால், இந்த போர்ட்டல் உண்மையிலேயே விண்ணப்பங்கள் ஏற்கப்படுவதன் கால அளவைக் குறைத்துள்ளதா என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. முன்பு எத்தனை நாட்கள் எடுத்தது, இப்போது எத்தனை நாட்கள் எடுக்கிறது ஆகிய விவரங்கள் இல்லாமல், அமைச்சர் பயன்படுத்தும் விரைவாக எனும் வார்த்தை அர்த்தமற்ற ஒன்று.

மொத்தத்தில், ஒன்றிய அரசின் பதில்கள் PMEGP திட்டம் கிராமப்புற மக்களுக்கு பயனளிக்கிறதா எனும் உண்மை நிலவரத்தை காட்டவில்லை. அதற்குப் பதிலாக, புதிய கேள்விகளையும் சந்தேகங்களையுமே எழுப்பியுள்ளது.

இந்த திட்டம் கிராமப்புறங்களில் வெற்றியடைய வேண்டுமானால், ஒன்றிய அரசு தன்னுடைய சம்பிரதாய நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, உண்மையான அக்கறையோடு செயல்பட வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

கேரள மாநில தி.மு.க. சார்பில் ஓணம் திருநாள் கொண்டாட்டம்!

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் அறிக்கை!

திருவனந்தபுரம், ஆக.24–

கேரள மாநிலக் கழக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

உலகம் முழுவதும் உள்ள மலையாள மொழி பேசும் மக்கள் கொண்டாடும் பண்டிகை ஓணம் திருநாள் ஆகும். ஓணம் பண்டிகை பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது அதில் முக்கியமான நாளாக திருவோணம் விளங்குகிறது இந்த திருவோணம் அன்று புத்தாடை அணிந்து பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தி அன்று மதியம் கேரள பாரம்பரிய உணவு வகையான சத்யா என்னும் சைவ விருந்து பரிமாறி உண்டு மகிழ்வர்.

இந்த ஓணம் பண்டிகையை முன்னிட்டு மலையாள மொழி பேசும் மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் ஆங்காங்கே இருக்கும் ஏழை எளிய மக்களும் இந்த ஓணம் பண்டிகையை கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்தில் ஓணக்கோடி ,ஓணக்கிட் என்ற பெயரில் புத்தாடைகள் காய்கறிகள்

அடங்கிய தொகுப்புகள மற்றும் மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகள என்று பலவிதமான பொருட்களை வழங்குவது வழக்கம். கேரள மாநில திமுக சார்பிலும் பல வருடங்களாக இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. அது போல இந்த ஆண்டு வரும் செப்டம்பர் 5 ஆம் தேதி அன்று திருவோணம் வருகிறது.

இந்த ஓணம் பண்டிகையை ஏழை எளிய மக்களும் கொண்டாடும் வகையில் தமிழக முதல்வர் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழக அரசு துணை முதல்வர் வருங்கால மன்னவர் எங்கள் இதயம் கவர்ந்த சின்னவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கட்டளைக்கு இணங்க கேரள மாநில திமுக சார்பில் இரண்டு இடங்களில் மிகப்பெரிய அளவிலும் மற்ற பகுதிகளில் ஆங்காங்கே இருக்கும் மாவட்ட கழகம் சார்பிலும் ஓணம் பண்டிகையை கொண்டாட முடிவு செய்து முதல் நிகழ்ச்சியாக வரும் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதியில் புனலூர் டவுனில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் (எனது) தலைமையில் கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜிராஜ் முன்னிலையில் ஓணம் ஆகோஷ ஊர்வலம் நடைபெறுகிறது.

ஊர்வலத்தை தென்காசி முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ.பத்மநாதன் கழக கொடியசைத்து தொடங்கி வைத்து கழக ஆட்டோ தொழிற் சங்கத் தொழிலாளர்களுக்கு ஓணக்கோடி வழங்குகிறார். கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நகர்மன்ற தலைவர் பொன்.ஆசைத்தம்பி, கொல்லங்கோடு நகர்மன்ற தலைவர் ராணி ஸ்டீபன், கன்னியாகுமரி மாவட்ட கழக முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் சிற்றாறு ரவிச்சந்திரன் ஆகியோர் ஓணக்கிட் வழங்குகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ்,கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரி குமார் , துரை பேச்சிமுத்து, அருள் ஜோதி, அருண், மாவட்ட கழக அவைத் தலைவர் ஷாம் லால், அஜ்மல், அச்சு பிலால், சதாசிவம் ஆசாரி, ஏ.கே.நவாஸ்,ரினுராஜன் கிழக்கே கரை, பி.கே.பாபு, ஹரி, ஷாஜி வாலக்கோடு, லால்ஜி மோகன், ஷாலினி, ராணி ஆதித்யா, கீதா கிருஷ்ணன், ராமர், ஆரியங்காவு ஸ்டீபன் மற்றும் கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணியினர் கலந்து கொல்கிறார்கள். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கொல்லம் மாவட்டக் கழக நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் வாழ் எழுத்தாளர் – தி.மு.க. அயலக அணி நிர்வாகி ச.கமலக்கண்ணன் எழுதிய

'ஜப்பானிய பழங்குறுநூறு' இலக்கிய உரை நூல் அறிமுக விழா!

முனைவர் ய.மணிகண்டன் தலைமை! முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் நூல் அறிமுக உரை!

சென்னை, ஆக. 24-

ஜப்பான்வாழ் எழுத்தாளரும் ஜப்பான் தி.மு.க. அயலக அணி நிர்வாகியுமான ச.கமலக்கண்ணன் "ஜப்பானியப் பழங்குறுநூறு" என்னும் பெயரில் ஜப்பானிய இலக்கியத்துக்கு எழுதிய உரைநூலின் அறிமுகவிழா சென்னை கவிக்கோ அரங்கில் 17 ஆகஸ்ட் அன்று மாலை நடைபெற்றது.

மக்கள் சிந்தனைப் பேரவையின் சென்னைக்கிளை ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் பேரவையின் செயலாளர் ந. அன்பரசு வரவேற்புரை நல்கினார். சென்னைப் பல்கலையின் தமிழ்மொழித் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ய.மணிகண்டன் தலைமை வகிக்க, சொற்பொழிவாளர் முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் நூலை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். இருவரின் உரைகளிலும் நூலின் சிறப்புகளும் சுவையான பகுதிகளும் எடுத்துரைக்கப்பட்டன.

மூன்றரை ஆண்டுகால உழைப்பில் விளைந்த இந்நூலுக்கு வித்திட்ட மருத்துவர் இரா. கலைக்கோவன் அவர்களுக்கும் நூலைப் பதிப்பிக்க உதவிய த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கும் நன்றிகூறி உரையைத் தொடங்கிய நூலாசிரியர் ச.கமலக்கண்ணன், நூலின் உள்ளடக்கத்தை விளக்கியும் பழங்குறுநூறு இலக்கியத்தை அறிமுகப்படுத்தியும் ஏற்புரை யை நிறைவு செய்தார்.

பேராசிரியர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், நீதியரசர் ஜியாவுதீன், வழக்கறிஞர் காந்தி பாலசுப்ரமணியம், எழுத்தாளர் கோவி லெனின், பேராசிரியர் முனைவர் நெல்லை சுப்பையா, எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன், இலக்கிய ஆர்வலர் திருமதி. ரேகா நாயர், இதய அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் சிவமுத்துக்குமார் உள்ளிட்ட புகழ் பெற்றவர்கள் பங்கேற்ற இந்நிகழ்வை செல்வி பவித்ரா பாலசுப்ரமணியன் தொகுத்து வழங்கினார்.

எளிமை, மாணவர்கள் மீது கனிவு, செய்யும் தொழிலில் தெளிந்த அறிவு உள்ளிட்ட பண்புகளால் ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கையை மாற்றியவர்!

வாஜிராம் & ரவி ஐ.ஏ.எஸ். பயிற்சி மைய இயக்குநர் பி.எஸ்.ரவீந்திரன் மறைவு, இளைஞர்களுக்குப் பேரிழப்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

சென்னை, ஆக. 24-

வாஜிராம் & ரவி ஐ.ஏ.எஸ். பயிற்சி மையத்தின் இயக்குநர் பி.எஸ். ரவீந்திரன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "எளிமை, மாணவர்கள் மீது கனிவு, செய்யும் பணியில் தெளிந்த அறிவு ஆகிய பண்புகளால் ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கையை மாற்றிய பி.எஸ்.ரவீந்திரன் அவர்களின் மறைவு இளைஞர் சமுதாயத்துக்குப் பேரிழப்பு!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

வாஜிராம் & ரவி IAS பயிற்சி மையத்தின் இயக்குநர் பி.எஸ். ரவீந்திரன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

UPSC தேர்வு எழுதும் மாணவர்களுக்கு 40 ஆண்டுகளாகப் பாடமெடுத்து வந்த ரவீந்திரன் அவர்கள், தனது ஆழ்ந்த, அகன்ற அறிவால் எத்தனையோ சாதனையாளர்களை உருவாக்கியுள்ளார்.

அரசு நிர்வாகத்தில் பெரும் பங்காற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலர், இவரால் பட்டை தீட்டப்பட்ட மாணவர்கள் என்ற வகையில் இந்தியாவின் வளர்ச்சியில் இவரது பணி அளப்பரியதாகும்.

தற்போது தமிழ்நாடு அரசில் பணியாற்றி வரும் பல அதிகாரிகளும் இவரால் உருவாக்கப்பட்ட பாடக்குறிப்புகளால் பயன்பெற்றவர்கள், நேர்முகத் தேர்வுக்குப் பயிற்சி பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எளிமை, மாணவர்கள் மீது கனிவு, செய்யும் பணியில் தெளிந்த அறிவு ஆகிய பண்புகளால் ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கையை மாற்றிய அவரது மறைவு இளைஞர் சமுதாயத்துக்குப் பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. துணைவியார்

திருமதி. ரேணுகாதேவி மறைவு!

திருமதி.சோனியா காந்தி இரங்கல்!

புதுடெல்லி, ஆக. 24-

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியார் திருமதி ரேணுகாதேவி அம்மையார் அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக சென்ற 19.8.2025 அன்று சென்னையில் இயற்கை எய்தினார். இந்த துயரச் செய்தி அறிந்து காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி எம்.பி. அவர்கள் டி.ஆர்.பாலுவுக்கு தனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திருமதி.சோனியா காந்தி அம்மையார் 21.8.2025 அன்று எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு:

ரேணுகாதேவி அவர்கள் ஒரு அற்புதமான மனைவியாக, பிள்ளைகளுக்குத் தாயாக தங்கள் குடும்பத்தார் அனைவராலும் பெரிதும் போற்றப் பட்டவர்; தொகுதி மக்களின் மதிப்பைப் பெற்ற அவர் மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பரிவுடனும் கனிவுடனும் உணர்ந்தவர்.

இவற்றிலிருந்து தான் துக்ககரமான இந்த நேரத்தில் நீங்கள் ஆறுதல் பெற வேண்டும். கொடுமையான இந்த இழப்பைத் தாங்கிடும் வலிமையை நீங்களும் தங்கள் குடும்பத்தாரும் பெற்றிட வேண்டும்.

இவ்வாறு திருமதி. சோனியாகாந்தி எம்.பி. தெரிவித்துள்ளார்.